DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | மனோகரன் |
| Father's Name | சண்முகம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **25.09.2025**

**EP.No. 2 /2018 ம.சா.1**

(சாட்சி இ.ம.எண். 04/2023 அனுமதிக்கப்பட்டு உத்தரவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைக்கப்பட்டு)

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

1. 2–ம் மனுதாரரர் என்னுடைய உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2–ம் எதிர்மனுதாரர் லதா என்பவர் என்னுடைய உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெயர் என்னவென்றால் சண்முகம் ஆகும். என்னுடைய தகப்பனாரின் தாயார் என்னுடைய பாட்டியின் பெயர் என்னவென்றால் சாரதாம்மாள் ஆகும். மேற்படி சாராதா அம்மாள் என்பவருக்கு உடன் பிறந்த சகோதரி ஜெயலட்சுமி என்பவர் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி சாரதாம்மாள் மற்றும் ஜெயலட்சுமி என்பவர்கள் இருவரும் குந்தியம்மாள் மகள்கள் என்றால் சரிதான்.

2. எனது சொந்த ஊர் அம்பலூர் ஆகும். நான் எத்தனை வருடமாக பெங்களூரில் குடியிருந்து வருகிறேன் என்றால் கடந்த 50 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் என்ன பணி புரிகிறேன் என்றால் சுயவியாபாரம் செய்து வருகிறேன். எனது

பாட்டி சாரதாம்மாள் எனக்கும் எனது தம்பி முரளிக்கும் 13/1974 ஆக பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் அம்பலூரில் உள்ள அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

3. மேற்படி உயிலை எழுதி வைத்த பிறகு கடந்த 08.04.2002–ல் எனது பாட்டி சாரதாம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு அந்த உயில் மூலம் சொத்து எனக்கும் முரளிக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு எனக்கு பாத்தியப்பட்ட வீட்டில் 2–ம் எதிர்மனுதாரர் லதா என்பவர் குடியிருக்க அனுமதி அளித்தேன் என்றால் சரிதான். அது முதல் தற்போது வரை அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார் என்றால் மேற்படி லதா தான்.

4. நான் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.175/2004 என்ற வழக்கை இந்த இந்த மனுவில் 1–ம் எதிர்மனுதாரரான G.மனோகரன் என்பவரும் தரப்பினர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்தேன் என்றால் எனது பாட்டியின் பதிவு செய்யப்பட்ட உயிலின் அடிப்படையில் உரிமை கோரி தாக்கல் செய்திருந்தேன்.

5. மேற்படி வழக்கானது தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தேன். அந்த மேல்முறையீடு ஆனது A.SNo.30/2015 என்றால் சரிதான். அந்த மேல்முறையீடானது 20.12.2019–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் படி கீழமை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பும் தீர்ப்பாணையும் ரத்து செய்யப்பட்டு மீண்டும் வழக்கு கீழமை

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு கூடுதல் சாட்சியங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

6. இந்த மனுவிற்கு சம்பந்தப்பட்ட அசல் வழக்கான 84 / 2015 வாதியான G.மனோகரன் என்னையும் எனது தம்பி முரளி என்பவரின் தேவையான தரப்பினராக இருந்த போதும் எங்களை தரப்பினர்களை சேர்க்காமல் லதா என்பவரை மட்டும் சேர்த்து மறைமுகமாக ஒரு தீர்ப்பை பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

7. இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணமான 02.05.1974–ல் சாரதம்மாள் உயில் எழுதி வைத்த ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகலை தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் மனுவில் சம்பந்தப்பட்ட வீடானது ஆதியில் குந்தியம்மாள் என்பவற்கு பாத்தியப்பட்டு 27.03.1952–ம் தேதியில் ஆவண எண்.5/1952 மூலமாக சாரதாம்மாள் மற்றும் ஜெயலட்சுமி இரண்டு பேருக்கும் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி வீட்டில் ஜெயலட்சுமி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட ½ பங்கு பாத்தியத்தை தன்னுடைய அக்கா சாரதாம்மாள் என்பவருக்கு கடந்த 17.09.1972–ல் ஆவண எண்.1887/1972–ன் படி விற்றுவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரயத்தின் அடிப்படையில் மொத்த வீடு சாரதாம்மாளுக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

9. சாரதம்மாள் தான் உயிரோடு இருந்த போது 250 சதுர அடி காலி நிலத்தை கடந்த 17.07.1992–ல் ஆவண எண்.1788/1992–ன் படி ராஜவீதிக்கு தெற்கே, பொது இடத்திற்கு வடக்கு, பாண்டியன் மனைவி ஜானகி அம்மாள் மனைக்கு கிழக்கே, நான் நிறுத்திக் கொண்டிருக்கும் மனைக்கு மேற்கே, இதன் மத்தியில் கிழக்கு மேற்கு 10 அடி வடக்கு தெற்கு 25 அடி ஆக 250 சதுர அடி கொண்ட காலி மனை மட்டும் என்று கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் மனுவுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்

10. மேற்படி காலி மனை போக மீதமுள்ள 250 சதுர அடி வீடாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு உண்டான வீட்டு வரி ரசீது மின் கட்டணம் தொடர்ந்து சாரதாம்மாள் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். ஸ்ரீதரன் என்பவர் யார் என்றால் பூங்கோதை என்பவரின் கணவர் ஆவார். மேற்படி பூங்கோதை ஜெயலட்சுமி என்பவரின் மகள் என்றால் சரிதான்.

11. பூங்கோதைக்கு பாத்தியப்பட்ட இடம் 250 சதுர அடி காலி மனைதான் அவ்வாறு இருக்க அவர் இறந்த பிறகு அவருடைய கணவர் ஸ்ரீதரன் உரிமையில்லாமல் 601 சதுரடியை G.மனோகரன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு விற்பதற்கு ஸ்ரீதரன் என்பவருக்கு உரிமை இருக்கிறதா என்றால் இல்லை. மேற்படி ஸ்ரீதரன் என்பவர் இறந்துவிட்டாரா என்றால் சரிதான் இறந்து இரண்டு வருடங்கள் ஆகிறது.

12. மேற்படி ஸ்ரீதரன் என்பவர் G.மனோகரன் என்பவருக்கு விற்பனை செய்த 13.03.2003–ல் ஆவண எண்.850/2003 சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கோவிந்தராஜ் என்பவர் மேற்படி ஸ்ரீதரன் என்பவரின் மகன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் மங்களூர் ஓடு போட்ட வீடு என்று மோசடியாக சேர்த்துள்ளதால் அந்தக் கிரய பத்திரம் என்னை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரிதான்.

13. சாரதம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட 250 சதுர அடி போக மீதமுள்ள நீளமானது எனக்கு பாத்தியப்பட்டது என்று தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தேவையான தரப்பினராக இருந்தும் என்னைத் தரப்பினராக சேர்க்காமல் அசல் வழக்கில் லதாவை மட்டும் சேர்த்து பெற்ற தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி தாக்கல் செய்திருக்கும் இந்த நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| ***ESHWAR VISWANATHAN*** | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வாணியம்பாடி.**